**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்-பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட கடன் உடன்படிக்கை என்பவற்றின் பிரகாம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் அரச உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பினனர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2024 சனவரி 05 வரை மூன்று தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவுக்கு ஒப்பந்தகாரர் மற்றும் ஆலோசனை சேவைக் கம்பனியால் வழங்கப்பட்ட 178 அலுவலக உபகரணங்கள், அலுவலக தளபாடங்கள் மற்றும் கணனிகளிற்கான நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் கணக்கெடுப்புச் சபையால் சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | ஆர்எஸ்சீ(என்சீ) கையளிக்கப்பட்ட சொத்துக்களிற்கான மூலதனமாக்கல் செய்முறையை தொடங்கியிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகையில் சரிபார்த்தல்கள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தகாரரின் பீஓகியூ ஆவணங்களில் 178 உருப்படிகள் ரூபா 17.97 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டது. ஆனால், இந்த அனைத்துச் சொத்துக்களும் நிலையான சொத்துக்களில்லை. பீஓகியூ இன் பிரகாரம், அலுவலகம், நீர் வழங்கல், மின்சாரம் மற்றும் காகிதம், அலுவலகப் பயன்பாடுகள் போன்ற தாபிப்பிற்காக உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 17.97 மில்லியனாகவிருந்தது. | மீதமாகவுள்ள சொத்துக்களையும் பீஓகியூ உருப்படிகளின் கீழ் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட நிலையான சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயற்திட்ட அலுவலகம் அத்தகைய சொத்துக்கள் மீது தெளிவான அறிக்கைகளை பேணுவதால் இது அதனை கணக்கிற்கு எடுப்பதற்கு முன்னர் அமையாளங்காணப்பட்டு தெளிவுபடுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயன்முறை

### 3.1 பௌதீகச் செயன்முன்னேற்றம்

செயற்திட்டம் 2013 பெப்ரவரியில் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியதுடன் 05 ஆண்டுகளுக்குள் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒன்பது வருடங்களும் பத்து மாதங்களும் நிறைவடைந்த போதிலும் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 98.56 சதவீதமாகவும் 92.3 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும், மீளாய்வாண்டில் இச் செயற்திட்டமானது 2.78 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்துள்ளது. செயற்திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஒட்டுமொத்த முன்னேற்றங்கள் பின்வருமாறுள்ளன

| இலக்கம். | நடவடிக்கை | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு % | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்ட இலக்கு % | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இசின் வெசாகல வலயத்தில் பீவீசி குழாய்களிடல், டீஐ மற்றும் ஜீஐ குழாய்களைப் பொருத்தி மற்றும் வழங்குதல், பொருத்துக்கள் மற்றும் விசேடமளித்தல் (லொட் சீ -1) | 100 | 95 | எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைதலானது மேலும் தாமதமாக்கப்படும். | லொட சீ 1 மற்றும் லொட் சீ 3 க்கான கழுவுதல் மற்றும் கிருமிநீக்கம் செய்தல் லொட் பீ - லொட் சீ இணைப்புக்கள் போன்றவற்றை பூர்த்தியாக்காமையால் காலதாமதமாக்கப்பட்டது. எனினும், இணைத்தல் வேலைகள் 2023 ஆகஸ்ட் இலிருந்து லொட் சீ1 ஒப்பந்தகாரரால் தொடங்கப்பட்டது. | இந்தக் கூறின் மிகுதி வேலையினை பூர்த்தி செய்வதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரன்வேவா, கிழக்கு ரன்வேவா மற்றும் எத்தகடா வலயத்தில் பீவீசி குழாய்களிடல், டீஐ மற்றும் ஜீஐ குழாய்களைப் பொருத்தி மற்றும் வழங்குதல், பொருத்துக்கள் மற்றும் விசேடமளித்தல் (லொட் சீ-3) | 100 | 96 | எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைதலானது மேலும் தாமதமாக்கப்படும். | ஒப்பந்தகாரர் 2023 யூலை இலிருந்து வேலைகளை மீளத்தொடங்க வேண்டியதுடன் கழுவுதல் மற்றும் கிருமிநீக்கம் செய்தல் வேலைகள் தொடருகின்றது. 44 கிமீ கழுவுதல் மற்றும் 28 கிமீ கிருமிநீக்கம் செய்தல் இது வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்வில்லை. (116 கிமீ கழுவுதல், 132 கிமீ மற்றும் கிருமிநீக்கம் செய்தல் மற்றும் 58 லொட் பீ – லொட் சீ ஆன இணைப்புக்கள் தொடர்ந்திருந்தது. | கழுவுதல் மற்றும் கிருமிநீக்கம் வேலைகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், குறித்த காலத்திற்குள் ஒப்பந்த வேலைகளை பூர்த்திசெய்வதற்காக நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 பெப்ரவரியில் செயற்திட்டம் அதனுடைய வேலைகளை தொடங்கியிருந்த போதிலும் உள்ளீர்த்தல் வசதி நீர் சுத்திகரிப்பு பொறி தரை சம்ப்கள், உயர்த்தப்பட்ட தொட்டிகள், அலுவலக கட்டிடங்கள், இயந்திர மற்றும் மின்சார பணிகள் ஆகியவற்றிற்கான பிரதான ஒப்பந்தம் செயற்திட்டம் தொடங்கி ஐந்து வருடங்கள் கடந்த பின்னர் 2018 மார்ச் இல் வழங்கப்பட்டது. இந்தக் காலதாமதமானது ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் மந்தமான செயலாற்றலுக்கு பிரதான காரணமாகவிருந்ததுடன் இது விலைமனு ஆவணங்களின் மதிப்பீட்டுச் செய்முறையிலும் முக்கிய காலதாமதத்தை ஏற்படுத்தியது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 88.7 கிலோமீற்றர் எச்டிபீ பரிமாற்றல் பிரதானி மற்றும் 163 கிலோமீற்றர் எச்டிபீ பரிமாற்றல் பிரதானி (லொட் பீ ஒப்பந்தம்) என்பவற்றை வழங்கி அமைப்பதற்காக பிரதான குழாய் பதிக்கும் ஒப்பந்தம் 2017 நவம்பர் 08 இல் வழங்கப்பட்டு 2 வருடங்களினுள் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டது. ஒப்பந்தத்தின் காலம் 2022 ஆகஸ்ட் 31 வரை 08 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீகச் செயன்முன்னேற்றம் 98 சதவீதமாகவிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய 147 லொட் பீ மற்றும் லொட் சீ இணைப்புக்களில் 12 இணைப்புக்கள் மாத்திரம் 2023 யூலை 19 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. | மிகுதி வேலைகளை காலதாமதமில்லாமல் பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 களப்பரீட்சிப்பின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல் மற்றும் எலும்பு புளோரியஸ் போன்றவற்றை விளைவிக்கின்ற மற்றும் நாள்பட்ட கிட்னி நோய்களைப் பரப்புகின்ற அபாயகரமான காரணிகளில் ஒள்றானதுமான பாதுகாப்பற்ற மாசுபட்ட நிலத்தடி நீரில் தங்கியுள்ள மக்களுள்ள அனுராதபுரத்திலுள்ள மதவாச்சிய மற்றும் சம்பாவ பிரதேச செயலகத்திலுள்ள 75 கிராம அதிகாரியிலுள்ள 25,000 குடும்பங்களிலுள்ள 115,000 மக்களுக்கு பாதுகாப்பு நீரினை வழங்கும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டில் செயற்திட்டம் தொடங்கப்பட்டது. 8 நீடிப்புக்களுடன் ரூபா 8,285 இனை செலவழித்து பத்து வருடங்கள் கடந்த பின்னர் மீளாய்வாண்டின் இறுதியின் போது செயற்திட்டம் 90 சதவீதத்திற்கு மேலான செயன்முன்னேற்றத்தை பதிவு செய்ததுடன் உடன்பட்ட கடனின் பயன்படுத்தப்படாதவை தொடர்பில் ரூபா 45.68 மில்லியனையும் முலதனக் கொடுப்பனவாக ரூபா 1,309 மில்லியன் ரூபாவினையும் அரசாங்கம் செலுத்தியது. எனினும்,இந்தச் செயற்திட்டத்திற்கு பிரதான நீர்வளமானவுள்ள மகான்டறாவ நீர்த்தேக்கத்திலிருந்து 9,400 கியூபிக் மீற்றர்கள் கொள்ளவிலுள்ள தேவையான நாளாந்த நீரினை வழங்கமுடியாதிருந்தமையால் இந்தச் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்திருக்கமுடிந்திருக்கவில்லை. விவசாய அமைப்புக்களிலிருந்து வந்த எதிர்ப்பு காரணமாக செயற்திட்டத்திற்கு நீரினை வழங்ன முடியவில்லையென 2023 யூலை 19 இல் களப்பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டதுடன் இந்த எதிர்ப்பிற்கான காரணம் சாத்தியவளக் கற்கையில் மதிப்பிடப்பட்டிருக்கவிவ்லை. | 2024 சனவரி வரை கடன் நீடிக்கப்பட்டிருந்தபோதும் மீள்கொடுப்பனவுப் பட்டியல் மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால், பட்டியலின் பிரகாரம் மீள்கொடுப்பனவு தொடங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் முறையான கற்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை 2012 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட தடுப்புக்கள் காரணமாக எம்ஓயூவில் கைச்சாத்திடப்பட்டவாறு தேவையான நீரினை வழங்கியிருக்கவில்லை. எனினும், ஜீஏ, நீர்ப்பாசனத் திணைக்களம், மற்றும் விவசாய அமைப்புக்களுடன் கூட்டங்களை நடாத்தல், மற்றும் விவசாயிகளுக்கு கவனயீர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கல் போன்றவற்றின் மூலம் செயற்திட்டத்தின் பரீட்சிப்பிற்காக, கிருமிநீக்கல் என்டபிள்யூஎஸ்டிபீ நீரின் 312 ஏசி.எவ்டி ( 2022 ஒக்தோபர் இலிருந்து 2023 ஆகஸ்ட் வரையிலும்) பிரித்தெடுக்க முடியும். | மேலதிக காலதாமதமில்லாமல் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்திற்கு மகாகண்டாறவ நீர்த்தேக்கத்திலிருந்து நீரினைப் பிரித்தெடுப்பது தொடர்பில் 2012 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் (எம்ஓயூ) பிரகாரம் மகாகனடாறவ நீர்ச் சுத்திகரிப்பு பொறியின் பூர்த்தியாக்கலின் பின்னர் நாளொன்றிற்குத் தேவையான 6,700 கியூபிக் மீற்றர்கள் குறுங்காலத் தேவைப்பாட்டினை பிரித்தெடுப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் இணங்கியிருந்தது. எனினும், நீர்ச் சுத்திகரிப்புப் பொறியின் பரீட்சிப்பு வேலைகள் மற்றும் குழாய் இணைப்புக்களின் கிருமி அகற்றல் வேலைகளிற்காக மாத்திரம் நாளொன்றிற்கு 1 ஏக்கர் அடி நீரினை (1233 கியூபிக் மீற்றர்) தற்போது நீர்ப்பாசனத் திணைக்களம் வழங்குகின்றது. | என்டபிள்யூஎஸ்டிபீ ஆனது மகாகண்டாறவவிலிருந்து நீரினை வழங்காமையால் இணைப்பு இலக்குகளை அடையமுடியாதிருந்தது. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உயர்மட்ட தீர்மானம் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சிற்கு இடையில் உயர்மட்ட கலந்துரையாடல்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. | தற்போதுள்ள பிர்சசனைகளைத் தீர்த்து எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நீர்வளங்கள் இல்லாமல் இருக்கின்ற பிரதான பிரச்சனைக்கு தீர்வாக மகாாண்டாறவாக்கு நீரினை வழங்குமுகமாக எறுவெவாவின் ஆர்பீ கால்வாயின் மறுசீரமைப்பாகவுள்ள நீர்ப்பாசன முறைமையின் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் மகனகண்டாறவ நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு ரூபா 381 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையில் தொடங்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை ரூபா 176 மில்லியன் நீர் வழங்கல் அமைச்சால் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த மாற்றுத் தீர்வு இதுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் இந்தச் செயற்திட்டத்திலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் இதுவரை செலவழிக்கப்பட்ட பணத்திற்கான பெறுமதி இல்லாமல் மேலும் காலதாமதமடைந்திருந்தது. | எறுவெவாவிலுள்ள ஆர்பி கால்வாயினை நிர்மாணிப்பதன்மூலம் 2022 ஆம் ஆண்டின்போது 3000 ஏக்கர் மேலதிக அடியினை பெறமுடிந்திருந்தது. அத்துடன், மகனகண்டாறவ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு கசிவினை அதிகரிப்பதன் மூலம் மகனகண்டாறவ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 2400 ஏக்கர் அடியினால் அதிகரித்தது. கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நீர்ப்பாசன முன்னேற்றங்களினை பூர்த்திசெய்வதற்கு மிகுதி 381 மில்லியன் தொகையினை விடுவிப்பதற்கு (205 மில்லியன் விடுவிப்பதற்கு) முக்கியமாகவுள்ளது. | தற்போதுள்ள பிர்சசனைகளைத் தீர்த்து எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் கைச்சாத்திடப்பட்ட எம்ஓயூ இன் பிரகாரம் மகாவலி அதிகாரசபையால் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்ற என்சீபி கால்வாய் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலின் பின்னர் நீர் சுத்திகரிப்பு பொறிக்கு முழு கொள்வளவினையும் விடுவிப்பதற்கு இணங்கப்பட்டது கணக்காய்வால் மகாவலி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் நிர்மாண வேலைகள் தற்போதும் ஆரம்ப கட்டத்திலுள்ளதுடன் 2030 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு | செயற்திட்டத்தின் நலனாளிகளுக்கு நீரினை வழங்குவதற்காக சுத்திகரிப்பு பொறிக்கு தொடர்ச்சியாக தேவையான நீரினை வழங்குவதற்கு உயர்மட்டத்தினால் திடமான முடிவினை எடுக்க வேண்டியுள்ளது. அதற்காக, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சிற்கு இடையில் உயர்மட்ட கலந்துரையாடல் | தற்போதுள்ள பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டதுடன் சில பொதிகள் செயற்திட்டத்தின் பிற்பகுதியில் வழங்குவதற்கு மீதமாகவிருந்தது. | எதிர்பார்க்கப்படுகின்றது. மகாவலி அதிகாரசபை பொறுப்பொன்றை கொண்டுள்ளதுடன் என்சீபீ கால்வாய் செயற்திட்டத்தை விரைவுபடுத்துவது மிகவும் முக்கியத்துவமுள்ளதாகவுள்ளது. | |
| (உ) | லொட் ஏ ஒப்பந்தத்தின் கீழ் மஹகனடறாவ சுத்திகரிப்பு பொநறி இடங்களில் பராமரிப்பாளர் வதிவிடத்தை கட்டுவதற்கு செயற்திட்டம் ஆரம்பத்தில் திட்டமிட்டது. தொடர்ச்சியாக 2020 இல் மிகிந்தலையில் சுற்றுலாவிடுதியினை கட்டுவதற்கு தீர்மானம் மாற்றப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்டது. கட்டிடத்தின் கட்டமைப்பு சிவில் வேலைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டு நிலப்பதப்படுத்தல் வேலைகள் உள்ளடங்கலாக அனைத்து முடிவுறுத்தல் வேலைகளும் 2023 யூலை 21 ஆன கணக்காய்வுத் திகதியிலும் முடிவுறுத்த வேண்டியுள்ளது என அவதானிக்கப்பட்டது. மேலும், ஆலோசனையாளரால் இந்த நிர்மாணங்கள் தொடர்பில் எந்தவித மேற்பார்வைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வேலைகள் மற்றும் மேற்பார்வையின் தரத்தினை சரிபார்ப்பதற்கு களத்தில் லொக் புத்தகம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், தரம் குறைந்த முலப்பொருட்களை பயன்படுத்தும் சாத்தியத்தன்மையுள்ளது. ரோசல் பிறாண்டினைப் பயன்படுத்துவதற்காக ஒப்பந்தகாரர் இறக்குமதி செய்யப்பட்ட தள ரைல்ஸ்களை பயன்படுத்தினார்கள் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | விதப்புரைகள் மற்றும் பீஓகியூ இன் பிரகாரம், ரைல்ஸ் ரோல்ஸ் அல்லது அதற்குச் சமனாக இருக்க முடியும். 2020 இலிருந்து அரசாங்காத்தால் விதிக்கப்பட்ட இறக்குமதி தடையால் ரோசல் ரைல்ஸ் களை வாங்குவதற்கு இங்கு பெரிய வரிசை இருந்தமையால் விலை தீடிரென அதிகரித்தது. எனினும், ஒப்பந்தகாரர் அனுமதியளிக்கப்படாத மற்றும் இதுவரை பணம் செலுத்தப்படாத கூரையிலுட் ரைல்ஸ் இனைப் போட்டனர். போடப்பட்ட ரைல்ஸ் மற்றும் ரோசல்களிற்கு இடையிலுள்ள வித்தியாசங்களிற்காக பீஎம்யூ சரிபார்க்கப்படுவதுடன் குறைந்த விகிதத்தில் ரைல்ஸ்களுக்கு செலுத்துவதற்கு சாத்தியத்தை கருத்திற்கொள்கின்றோம். | பெறுகை வழிகாட்டியில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் பீஓகியூவிலுள்ள விதப்புரைகளின் பிரகாரம், ரோசல்ஸ் அல்லது அதற்குச் சமமான ரைல்ஸ்களை பயன்படுத்துவது முக்கியமாகவுள்ளது. |
| (ஊ) | 2022 மார்ச் இலிருந்து டோனர் முகவராண்மையால் (ஜய்கா) மீள்வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால், சான்றுறதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களின் சிட்டைமீது ரூபா 666.5 மில்லியன் பெறுமதி கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் இறுதிக்கட்டத்தில் ஒப்பந்தகாரர் உற்சாகமாக ஈடுபட்டிருக்கவில்லை. பீஎம்யூ இனை பராமரித்தல், பயன்பாடு இல்லாமல் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு, கடப்பாட்டுக் கட்டணங்கள், கடன் வட்டி மற்றும் தவணைப்பணங்கள் மற்றும் நலனாளிகளின் சந்தர்ப்பக்கிரயம் போன்ற தேவையற்ற மற்றும் சிக்கனமற்ற செலவீனங்களைக் குறைப்பதற்கு செயற்திட்டத்தின் மீதமுள்ள பகுதியை | ஒப்பந்தகாரர்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்ட சிட்டைகளிற்காக பாலதாமதமாக்கப்பட்ட கொடுப்பனவுகளுடன் பாரிய காசுப் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். ஜய்கா இலங்கை அரசாங்க நிதியங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்படும் தொகையை கோருவதற்கு ஜய்கா இணங்கியிருந்தது. ஆகையால், இலங்கை அரசாங்கத்திடமிருந்து மிகுதியாகவுள்ள தொகையை ஏற்பர்டு செய்வதற்கு கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்கும் நிலுவைச் சிட்டைகளை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அதற்கிணங்க, நீர் வழங்கல் அமைச்சு, ஈஆர்டி, திறைசேரி மற்றும் ஜய்கா போன்றவற்கு பீஎம்யூ ஆனது உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தியாவது நிலுவைத் தொகையின் ஒருபகுதியை தீர்ப்பனவு செய்வதற்கு உற்சாகமாக ஈடுபடுவதற்கு அறிவித்திருந்ததுடன் நிர்வாகம் மற்றும் மீண்டுவரும் செலவீனங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | |

### 3 .4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டமானது 2022 சனவரியிலிருந்து 18 மாதங்கள் காலப்பகுதிக்காக உத்தியோகத்தர்கள் சம்பளங்கள் மற்றும் ஏனைய நிர்வாகச் செலவீனங்களாக ரூபா 38.33 மில்லியன் தொகையை ஏற்படுத்தி இருந்தது. எனினும், அந்தக் காலப்பகுதிக்காக செயற்திட்டத்தின் மொத்தச் செயன்முன்னேற்றம் 3.39 சதவீதமாகவிருந்தது. அதேநேரம், ஒப்பந்தகாரர் செயற்திட்ட நடவடிக்கைகளில் மந்தமாக ஈடுபட்டமையால் அவர்களின் நிலுவை சிட்டைகளை கொடுப்பனவு செய்யாமையால் 2021 திசெம்பர் 31 அளவில் இந்தச் செயற்திட்டத்தில் 4.54 சதவீத வேலைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கிணங்க, இலங்கை அரசாங்கமானது சிக்கனமற்ற வகையில் செயற்திட்ட அலுவலகத்தை பராமரிக்க வேண்டியுள்ளது. | பீஎம்யூ அலுவலகமானது என்டபிள்யூஎஸ்டிபீக்குரிய வதிவிடத்திற்கு மீளச்சென்றதுடன் உத்தியோகத்தர்களையும் குறைத்தது. மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்கும் ஒப்பந்தகாரர்களின் இறுதிச் சிட்டைகளை கையளித்தல் வேலைகளைப் பரீட்சிப்பதற்கும் செயற்திட்டத்தினை மூலதனமாக்கும் வேலைகளுக்கும் தேவையான 05 அதிகுறைந்த உத்தியோகத்தர்களை கொண்டு பீஎம்யூ இப்போது செயற்படுகின்றது. | சிக்கனமற்ற செலவீனங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்ட நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தகாரரால் ஆய்வுகூடம் மற்றும் நீர் சுத்திகரிப்பு பொறி (டபிள்யூரீபீ) க்கு கையளிக்கப்பட்ட ரூபா 1 மில்லியன் பெறுமதியான ஆய்வுகூட உபகரணம், இணைப்புப் பொருட்கள், குழாய்கள் மற்றும் இணைப்புக்கள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பில் முறையான அறிக்கைகள் நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட பொருட்களின் கையளித்தல் செய்முறை தற்போது நடைபெற்றுவருவதுடன் செயன்முறையை முடிந்தளவிற்கு விரைவாக முடிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள். | அரச விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக, செயற்திட்ட நடவடிக்கைகள் தொடக்கத்தில் இருந்து என்டபிள்யூஎஸ்டிபீ இன் உள்ளக கணக்காய்வு மூலம் கணக்காய்வு செய்யப்படுகின்றன. ஆனால் பீஎம்யூ இன் உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை ஒழுங்காக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |